
உ

பாம்பணி தேவஸ்தான வெளியீடு.

CONNEMARA PUBLIC LI
6 FEB 1955
MADRAS



# பாம்பணி என வழங்கும்
# பாதாளேச்சுர
# தல வரலாறு.



தொகுத்தெழுதியவர்:
ப. இராமநாத பிள்ளை,
தமிழாசிரியன்,
மன்னார்குடி.

---

11—5—1954.

உ

சிவமயம்

ஸ்ரீ பாம்பணி-நாதர் துணை.

# முன்னுரை.

அன்பர்களே!

சிவமணங் கமழும் சோழ நாட்டின்கண் காவிரிக்குத் தென் கரையில் விளங்கும் தலங்கள் பல. அவற்றுள் பாம்பணி நதியின் வடபால் **பாம்பணி** என வழங்கும் **பாதாளேச்சுரம்** ஒரு சிறந்த தலமாம்.

சைவ சமயாசாரியார்களாகிய நால்வரில் தேவாரம் பாடும் மூவரும், போற்றிய தலமாம். ஆனல் தற்போது நமக்குக் கிடைத்துள்ள தேவாரப் பதிகம் ஒன்றுதான். இது ஞான சம்பந்தரது திருப் பாடல்களாம். சிவக்ஷேத்திரக் கோவையில் திருநாவுக்கரசு நாயனரும், சுந்தரமூர்த்தி நாயனரும் இத்தலத்தைச் சேர்த்துப் பாடியுள்ளார்கள். திருஞானசம்பந்தர் இத்தலத்திற்கு எழுந்தருளியதைப் பெரியபுராணங் கூறுகிறது. அவ்வாறே சுந்தரர் எழுந்தருளியதற்கும் ஆதாரம் இருக்கிறது. எனவே மூவரும் பாராட்டி வழிபட்டுள்ளனரென்பது உறுதியே. ஆனல் மற்றைய தேவாரங்கள் நமக்குக் கிடைக்கவில்லை.

இத்தல வரலாற்றை, என்னைத் தொகுத்தெழுதும்படி ஊக்கி ஆக்கமுந்தந்த மானேஜர் திருவாளர் K. R. கல்யாண சுந்தர முதலியாரவர்கட்கு எனது நன்றி உரியதாகும்.

பக்தி, கல்வியறிவு, ஆராய்ச்சி முதலிய தகுதிகளில் ஒன்றும் பெருதவன் எழுதிய நூலில் குற்றங்காணுது, சிவசரிதத்தையே பொருளாக மதித்து உலகம் பொறுத்தருள்க.


இதை எழுதுவிக்கத் தோன்ருத் துணையாயிருக்கும் ஈசன் அமிருதநாயகி பாக நாகநாதரை வாழ்த்தி வணங்கும்,

அன்பன்,

**ப. இராமநாதன்**

தமிழாசிரியன், மன்னர்குடி.

மன்னர்குடி,
11—5—54.



CONNEMARA PUBLIC LIBRARY

பாம்பணி என வழங்கும்-பாதாளீச்சுரம் திருக்கோயில் முன்புறத் தோற்றம்

உ
சிவமயம்.

6 FEB 1955 MADRAS

# பாதாளேச்சுரத் தல அமைப்பு.

**தலம்:-** சோழநாட்டில்—தஞ்சாவூர் மாவட்டம் மன்னார்குடி தாலூகா—**பாம்பணி** கிராமம்.

**வழி:-** மன்னார்குடி புகைவண்டி நிலையத்திலிருந்து வடக்கே செல்லும் சாலையில் ஒரு மைலிலுள்ளது.

**ஆறு:- பாம்பணி நதி.**

**மூர்த்தியின் பெயர்:- நாகநாதர்—பாம்பணி நாதர் சர்ப்பபுரீசர்.**

**அம்மன் பெயர்:- அமிருதநாயகி.**

**தீர்த்தங்கள்:-** 1. பிரம்ம தீர்த்தம், சந்நிதிக்கு எதிரிலுள்ளது. 2. தேனு தீர்த்தம், கோயிலுக்குத் தென்புறம்: தெற்கு விதிக்கு இடையில் (பசு தீர்த்தம் என வழங்கும்) 3. ருத்ர தீர்த்தம், கோயிலுக்கு வடபுறம் (வெட்டுக் குளம் என வழங்கும்) 4. நீலத்வஜ தீர்த்தம், மேல விதிக்கு மேற்கிலுள்ளது. (நம்பி குளம் என வழங்கும்)

**தல விருட்சம்:- மாமரம்.**

**திருக்கோயில்:-** இரண்டு பிரகாரங்களையுடையது. கோயில் முழுதும் கருங்கல் திருப்பணி செய்யப்பட்டுள்ளது.

**தெய்வ மூர்த்தங்கள்.**

1. ராஜகோபுரத்துக்கு அடுத்துத் தெற்கு நோக்கி அமிருத நாயகி சந்நிதி.
2. பலிபீடம், நந்தி மண்டபம்.
3. துவார விநாயகர், தண்டபாணி சந்நிதிகள்.

### மூலத்தானம்.

கிழக்கு நோக்கிய சந்நிதி. ஸ்ரீ நாகநாதசுவாமி. சபை தெற்கு நோக்கிய சந்நிதி ஸ்ரீ நடராஜா—சிவகாமி.

கிழக்கு நோக்கிய சந்நிதி:- சோமாஸ்கந்தர்.

வடக்கு முகமாக:- தனஞ்செயன்.

### உட்பிரகாரம்.

வடபுரம் (தெற்கு முகமாக):- நிர்த்தன விநாயகர் ஸ்ரீ தெட்சணாமூர்த்தியும், நால்வரும்.

### கிழக்கு முகம்.

ஸ்ரீ மூல விநாயகர்:- விசேஷ விநாயகர்கள் 3. ஸ்ரீ வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணியம், (எதிரில் அண்ணாமலை நாதர்) விசேஷ லிங்கங்கள் 5. மஹாலட்சுமி.

### வடக்குப் பிரகாரம்.

பிரமா, துர்க்கை, சண்டேசுரர்.

### கீழ்புரம்.

நவக்ரஹ மண்டபம்:- நால்வர், சந்திர சூர்யர், பைரவர்.

### எழுந்தருளு மூர்த்தங்கள்.

மூலத்தானம், போகசக்தியம்மன், விநாயகர், சோமாஸ்கந்தர், வள்ளி தெய்வானை சமேத சுப்ரமண்யர், சந்திர சேகரர்-அம்பிகையுடன், பிரதோஷ நாயகர்-அம்பிகையுடன், மாணிக்கவாசகர், சம்பந்தர், அப்பர், சுந்தரர், பள்ளியறைச் சொக்கர், அஸ்திரதேவர், சுக்ரவார அம்மன், சண்டேசுரர் (சிலை வடிவமாக) அன்னத்வஜ மகாராஜா, சொர்ணத்வஜ மகாராஜா, நீலத்வஜ மகாராஜா.

-6 FEB 1955
MADRAS

உ
சிவமயம்

**குறிகளு மடையாள முங் கோயிலும்**
**நெறிகளு மவர் நின்றதோர் நேர்மையும்**
**அறிய வாயிர மாரண மோதிலும்**
**பொறியிலீர் மனமென் கொல் புகாததே!**

(அப்பர் தேவாரம்)

பூமகள் திருமுகமெனத் திகழும் சோழவளநாடு சிவ தலங்கள் நிறைந்து விளங்கும் திருநாடாம். அவற்றுள் காவிரிக்குத் தென்கரையில் உள்ள தலங்களில் சிறந்து விளங்குவது பாதாளேச்சுரமாம்.

திருப்பாற்கடல் கடையும்போது நாணாக விருந்த வாசுகி வலி பொறுக்காமல் கக்கிய பெரிய விடமே ஆலால விடமாம். எல்லா உலகங்களையும் காத்தருளும் பொருட்டுக் கருணையினல் அவ்விடத்தையுண்டு கண்டத்திலடக்கினர். இதனல் அவருக்கு நிலகண்டர் எனும் பெயர் வந்தது.

வாசுகி, இத்தகைய கொடிய விடத்தைச் சிவபெருமான் உண்ணும்படி நேர்ந்ததை யெண்ணி யெண்ணி நைந்துருகி, இப்பாபத்தைப் போக்கிக்கொள்ள இந்த லிங்கத்தைப் பக்தியுடன் பூசித்தது. பிறகு நாகலோகத்திலிருந்து, அட்ட நாகங்களும் முறையே பூசித்தன. தனஞ்செயன் நாடோறும் பூசித்தது. இக்காரணங்களால் இந்த லிங்கம் நாகலிங்கம் எனப்படும். நாகங்களுக்குச் சிறந்த பதியாய் விளங்குவதால், சிவபெருமானுக்கு நாகநாதர் எனும் பெயர் உண்டாயிற்று. தலமும் பாம்பணியென வழங்கும். பாதாளத்திலுள்ள பாம்புகள் பூசித்ததால் பாதாளேச்சுரம் எனவும் பெயர் பெற்றது. தேவாரத்தில் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனர் தலத்தையும் கோயிலையும் ஒவ்வொரு திருப்பாடலிலும் "கோயில் பாதாளே" எனச் சிறப்பித்துள்ளார்.

மகதநாட்டில், முன்னொருகால், தர்மாரண்யம் எனும் அந்தணர் வீதியில் தேவசர்மா என்றொரு அந்தணரிருந்தார். அவர் பிருகுமகரிஷியின் புதல்வியும் அதிக அழகுமுடைய வளுமாகிய காந்திமதியைத் திருமணஞ்செய்து இல்லறம் நடந்திவந்தார். ஒருசமயம் தேவசர்மாவின் தமையன் செய்த யாகத்திற்குப் போக நேர்ந்தது. கற்புக்கரசியாகிய காந்திமதி மட்டும் இல்லத்தில் இருந்தாள்.

ஒரு நாள் உச்சிப்போதில் அகத்தியர் இவ்வீட்டிற்கு விருந்தினராகவந்தார். காந்திமதியோ பாபவசத்தால் வந்த அகத்தியமுனிவரை அன்போடு வரவேற்று உபசாரம் செய்ய வில்லை. அப்படியிருந்தும், அகத்தியர் பசிதாகத்தால் வருந்திவந்ததால் தனக்கு ஏதேனும் கொடுக்கவேண்டு மென்று கேட்க "வீட்டில் உபசரிப்பதற்கு ஒன்றுமில்லை, கணவனும் அயலூர் சென்றிருக்கிறார்" என்று கூறினாள். பசியால் கோபமுண்ட அகத்தியர் "பிசாசாகக்கடவாய்" என்று சாபமிட்டனர்.

முனிவரின் சாபத்தால் அழகிய பெண்ணுருக்குலைந்து பிசாசு வடிவமானாள். பசியாலும் தாகத்தாலும் வருந்தி நாடு நீங்கிக் காடுசென்றாள். இப்படி பன்னிருவருடம் அலைந்து திரிந்தாள்.

இவள் பதியான தேவசர்மா அண்ணன் செய்த யாகம் முடிந்தவுடன் அவரிடம் விடைபெற்றுக்கொண்டு மகதநாடு வந்து இல்லத்தையடைந்தார். தன் மனைவியைக் காணாது திகைத்து, அண்டைவீட்டினரால், அகத்தியர் வந்தவிதமும், அவரை உபசரிக்காமலும், அவர் வேண்டிக்கேட்டும் ஒன்றும் உதவாத பாபத்தால் சாபம்பெற்று பிசாசு வடிவடைந்ததும் அறிந்து வருந்தி, அவளைத்தேடிப் புறப்பட்டார்.

நடுக்காட்டில் ஒருநாள் அவளைக்கண்டு கூப்பிட அவள் அறிவு கெட்ட பிசாசுவடிவமானதால், கணவனை யறியாது, மதியாது. பேசினள், தேவசர்மா நயம்படப் பேசித் தன் வயப்படுத்தித் தீர்த்தயாத்திரை செய்துவந்தார். ஒரு நாள் இவர்களிருவரும் பரத்துவாஜ ஆசிரமம் வந்து சேர்ந் தனர். முனிவரும் வந்தவர்களை உபசரித்தார். பிசாசுவடிவ மாயிருந்த காந்திமதியும் முனிவரை வணங்கி நின்றாள். பரத்துவாஜர் ஞானக்கண்ணால் இவளது வரலாற்றையறிந்து கூறுவாராயினர் "ஓ அந்தணரே! இவள் முன் பிறவியிலும் உமக்கு இளைய மனைவியாயிருந்தாள். எல்லா நலங்களும் அமைந்த உமது மூத்த மனைவியை இவள் ஓயாது துன்புறுத்தி வந்தாள். அப்பாபத்தால் இப்பிறவியில் அகத்தியர் மூலம் சாபம் பெற நேர்ந்தது. இப்பாபம் நீங்கும் வழியைக் கூறுவேன். சோழநாட்டில் பாம்பணிநதிக்கு வடகரையில் பாதாளேச்சுரம் என்னும் சிவதலமுண்டு. அது பிரமதீர்த்தம் சிவகங்கை, தேனு தீர்த்தம் முதலிய தீர்த்தங்கள் நிரம்பியது.

மேலும் தைமாதத்தில் பூச நட்சத்திரத்தில் நாகநாதர் பாம்பணிநதியில் தீர்த்தங்கொடுத்தருள்வர், அப் புண்ய நாளில் தீர்த்தமாடி நாகநாதரை வழிபட்டால், எல்லாப் பாபங்களிலிருந்தும் விடுபட்டுவிடுவீர்கள் என்று கருணை யோடுரைத்தவரை வணங்கி இருவரும் இத்தலத்திற்கு வரவும், தைப்பூசநாளும் வந்துசேர்ந்தது. தம்பதிகள் இரு வரும் பாம்பணிநதியில் தீர்த்தமாடி நாகநாதரை தெரிசித்தார் கள். முனிவர்கூறியபடி பிசாசு வடிவம் நீங்கிப் பழைய வடிவத்திலும் சிறந்த வடிவத்துடன் காந்திமதி விளங்கினாள்.

பிறகு அவ்விருவரும் இத்தலத்திலேயே தங்கி, தினமுந் தீர்த்தமாடிச் சிவதெரிசனம் செய்துவந்தனர். வெகு

காலமாய்ப் புத்திரப்பேறில்லாதவர்கட்கு நான்கு பிள்ளைகள் பிறந்தன. அவர்கட்கு நந்தன், பத்ரன், மதி, கிருதி என்று பெயரிட்டுப் பலகாலம் இல்லறம் நடத்திய தம்பதிகள் இருவரும் சிவலோகம் அடைந்தனர்.

### தீர்த்தச் சிறப்பு.

இத்தலத்திலுள்ள தீர்த்தங்களில் நாள்தோறும் பக்தியுடன் நீராடிச் சிவபூசைசெய்து வந்தவர்களில் சிறந்து விளங்கியவர் சுகலர் என்னும் முனிவராவர், ஒருசமயம் அவரது சகோதரியின் கணவனான சோம சர்மா என்பவர் வந்தார். அவர் செல்வத்தில் குபேரனுக்குச் சமானமானவர். சுகலர் சோமசர்மாவை நோக்கிக் கூறியதாவது "இன்று சித்திரா பௌர்ணமி பிரமோற்சவ முடிவாகிய இப்புண்ணிய நாளில் பிர்ம்மதீர்த்தத்தில் தீர்த்தங்கொடுக்க எழுந்தருளுவர் நாமும் ஸ்நானத்திற்குப்போவோமென்றார்.' செல்வச் செருக்கால் தன்னையும், கடவுளையும் மறந்த சோமசர்மாவோ "உலகில்எத்தனை தீர்த்தங்கள் இருக்கின்றன. இவைகளில் ஆடினால்என்ன? ஆடாவிட்டால் என்ன? நீயோ தரித்திரன், செல்வத்தைச் சம்பாதிக்க வழியறியாது, சிவதரிசனம், தீர்த்தாடனம், சிவபூசையென்று சதா பேசிச் சாம்பலைப் பூசிக்கொண்டு விருதம் விருதம் என்று பட்டினி கிடக்கிறாய் நீயே கிட" என்று இழித்துப்பேசிவிட்டு இல்லத்தை விட்டுத் தன்னூர் சென்று தன் மனைவியிடம் நடந்தவற்றைக் கூறினான். அவர் மனைவி சிறந்த கற்புடையவளாதலால், வினயமாக "அப்படிச் சொல்லாமலிருந்திருக்கலாம்" என்று மட்டும் கூறித் தன்குடும்பத்திற்கும் பதிக்கும் தீமை வராதிருக்கவேண்டுமே என்று மனதில் பயங்கொண்டிருந்தாள்.

இப்படிச் சில நாட்செல்ல சோமசர்மாவின் செல்வ மெல்லாம் தேய்பிறைபோல் தேய்ந்து அவர்கள் பிச்சை யெடுத்துண்ணவும் நேர்ந்தது. இவ்வரலாற்றை யறிந்த சுகலர் சிவபெருமானை வணங்கி பிரம்மதீர்த்தத்தை ஒரு பாத்திரத்தில் எடுத்துக்கொண்டு, தன் தங்கை விடடைந்தார், செல்வச்செருக்கொழிந்த சோமசர்மாவும், மனைவியும் இவரை வணங்கி யருள்செய்யவேண்டினர் சுகலரும் சிவநாமத்தை ஓதிக்கொண்டு பிரம்மதீர்த்தத்தைத் தெளித்து, உள்ளுக்கும் பருகச்செய்தார்.

பின்னர், சிறிது காலங்கழித்து சோமசர்மா, முன் போலச் செல்வம் பெருகி வாழ்ந்தனர். கிழத்தனம் நெருங்கவே பிள்ளைகளிடம் குடும்ப பாரத்தை ஒப்புவித்து அவ்விருவரும் வேண்டிய தனங்களைக் கைவசம் எடுத்துக் கொண்டு இத்தலத்திற்கு வந்து வசித்து, நாள்தோறும் தீர்த்த மாடி நாகநாதரைத் தெரிசித்துப் பல தான தருமங்கள் செய்து இறுதியில் சிவபதமடைந்தனர்.

**காமதேனு பூசித்தது.**


திருப்பாற்கடல் கடையும்போதுண்டான தெய்வத் தன்மை பொருந்திய காமதேனு, கற்பக மரத்துடனும்: சிந்தாமணியுடனும் இத்தலத்தை யடைந்து, தீர்த்தமாடிச் சிவதரிசனம் செய்தது. தனது பஞ்சகவ்யத்தாலும் பஞ்சா மிர்தத்தாலும் தனது பாலினாலும் விதிப்படி நாகநாதருக்கு அபிஷேகம் செய்து, கற்பகமரம் அளித்த ஆடை, அணி, சந்தனம், பூமாலைகளால் அலங்கரித்து சிறந்த அன்ன வகை களையும் நிவேதித்து, அர்ச்சித்துவந்தது. இப்படி நான்கு வருடம் பக்திசெய்து வந்தது. நாள்தோறும் தானகத் தன் மடியிலிருந்து சுரந்துபெருகும்பாலை அன்புடன் அபிஷேகித்து

வந்தது. இதன் பக்தியாலும் அபிஷேகத்தாலும் திருப்தி யடைந்த சிவபெருமான் நாகலிங்கத்தினின்றும் தோன்றிக் காட்சி தந்தருளினர். பல வரங்களையுங் கொடுத்தருளினர்.

மேலும் பசுவை, மகரசங்கராந்தி மறுநாளில் பூசிப்பவர் எல்லாப் பாபங்களிலிருந்தும் விடுபட்டு எனதருளை யடைவார்களாக. உனது பால் பெருகி ஓடித்தங்கிய குளமானது பசு தீர்த்தமென விளங்கிவரும், அதில் நீராடுவோர் எல்லா நன்மைகளையும் பெறுவாராக "என்று வரந்தந்து சிவலிங்கத்தில் மறைந்தருளினர்.

முன்னொருகால் தேவர்கட்கும், அசுரர்கட்கும் போரூண்டது. அசுரர்கள் பலத்தால் தேவர்களை யடித்துத் துரத்தினர். இதையறிந்த முசுகுந்த சக்ரவர்த்தி தேவர்கட்காகப்பரிந்து, அசுரர்களைப் போரில் வென்றார். பயந்தோடிய தேவர்களையும் தேவேந்திரனையும் அவர் உலகத்தில் குடியேற்றினர் இதனால் மகிழ்ந்த தேவர்களும் தேவேந்திரனும் முசுகுந்தச் சக்ரவர்த்தியை ஐராவதமேற்றி அமராவதியை வலஞ்செய்வித்து, அரசாணி மண்டபத்தில் அமரச்செய்து இன்னிசை, ஆடல், பாடல், விருந்துகளால் மகிழ்வித்தனர்.

அச்சமயம், நந்தனவனக்காவலாளி ஒரு சிறந்த முந்திரிப்பழக் கொத்தைக் காணிக்கையாக தேவேந்திரனிடம் கொடுக்க, தேவேந்திரனும் முசுகுந்த சக்ரவர்த்தி முன்வைத்தான் அதை மகிழ்ச்சியுடன் பெற்றுக்கொண்ட முசுகுந்த சக்ரவர்த்தியே அவ்வளவு சிறந்த கனியைத் தியாகராஜாவுக்கே அர்ப்பணஞ்செய்ய நினைத்துத் தான் உண்ணுமல் தியாகேசர் சந்நிதிக்கு எடுத்துவந்தார் அப்பொழுது தியாகேசர் அருளால் "ஓ அரசனே. இப்போது பாதாளேச்சுரத்தில்



பாம்பணி என வழங்கும்—பாதாளீச்சுரம் திருக்கோயில் உட்புறக் கோபுரம்.

6 FEB 1955

பிரமோற்சவம் நடக்கிறது. தியாகேசர் முதலான சகல மூர்த்திகளும் விசேஷமாக அங்கே விளங்குகின்றன. அவிடம் சென்று நிவேதிப்பாய்" என்று அசரீரி உண்டாயிற்று.

முசுகுந்தரும் தியாகேசரை வணங்கி விடைபெற்றுக் கொண்டு இத்தலத்திற்கு வந்து தியாகேசர் சந்நிதியில் பழக் கொத்தை வைத்தார். அப்போது அம்பிகை மடிமீதிருந்த குழந்தையாகிய முருகன் பழத்தை ஆவலுடன் அருந்தக் கை நீட்டினார். உடனே அம்பிகை, முருகனைத் தடுத்து, "சிவார்ப்பணம் செய்யாத ஒரு பொருளையும் அருந்தக் கூடாதென்று தடுத்தாள். சோமாஸ்கந்தர் கந்தனையெடுத்துத் தன் தொடைமீதிருத்தி அன்புடன் எல்லாக் கனிகளையும் அருந்தச் செய்தார்.

சிறந்த பக்தரான முசுகுந்தருக்கும் பேரருள் செய்தார். அது முதல் இத்தலத்தில் முருகக்கடவுளுக்கு முந்திரிப்பழம் விசேடமாக நிவேதிக்கப்படுவதாயிற்று.

**மாமரம் ஸ்தல விருட்சமான வரலாறு.**

முன்னே திருப்பாற்கடலில் அமுதம் கடையும்போது வெண்ணெயுருண்டை போல அமிருதத்தால் பூசப்பட்ட நான்கு மாங்கனிகள் பாற்கடலில் இருந்து உயரக்கிளம்பின. அதுகண்ட நான்கு முகன் அவைகளை யெடுத்து, ஒன்றை ஆனைமுகனுக்கும், மற்றொன்றை ஆறுமுகனுக்குங் கொடுத்து மகிழ்ந்தார். மற்றொரு பழத்தை காஞ்சியில் முளைக்கும்படி ஊன்றிவிட்டு நாலாவது பழத்தைப் பிழிந்து இத்தலத்தி லுள்ள நாகலிங்கத்திற்கு அபிஷேகம் செய்து அக்கொட் டையை சந்நிதிக்கு எதிரே விளங்கும் பிரம தீர்த்தத்தின் வடகரையில் ஊன்றினார். மரம் பிரமாண்டமாக முளைத்து அமுதமயமான சுவையுடைய பழங்களைக் கொடுத்து வந்தது.

இப்பழங்களை நாகநாதருக்கு அர்ப்பணம் செய்யாமல் யாரும் அருந்தக்கூடாது என்பது ஐதீகம். அதனுல் மாமரம் இத் தலத்திற்கு விருட்சமாய் விளங்கும் என்க.

**அன்னத்துவச மஹாராஜா அருள் பெற்றது.**

அம்சத்வஜ மஹாராஜாவின் புதல்வனுன நீலத்வஜ மகாராஜா இந்தத்தலத்திற்கு வந்து சிவாலயத்தின் மேல் புரத்தில் ஒரு பெரிய குளம் வெட்டி ஒரு போஜனசாலையுங் கட்டி, சிவபெருமானுக்கு ஏராளமான நைவேத்யங்களைச் செய்து வருபவர்க்கில்லை யென்னுமல் அன்னமளித்து வந்தான். இதனுல் அன்னத்துவசன் எனப்பெயரும் பெற்ருன்.

மேலும் இத்தலத்தில் காமதேனு முக்தியடைந்த ஆவணி மூலத்தில் பிரமோற்சவமும் ஏற்படுத்தி நடத்தி முக்தியடைந்தான்.

**சொர்ணத்துவச மகாராஜா அருள் பெற்றது.**

இத்தலத்தில் செய்யப்படும் தான தருமங்கட்கு அள விலாத பலன் உண்டாகும் என்பதையறிந்த சொர்ணத்துவச மகாராஜா என்பர் இங்கே வந்து தங்கி தினமும் தீர்த்தமாடி சிவதரினம் செய்து, இத்தலத்திற்கு வருபவர்கட்கெல்லாம் சொர்ணதானம் செய்து வந்தான். சிவனருளால் செல்வமும் ஆயுளும் பெருகவே, மென்மேலும் சொர்ண தானம் செய்து சிவாலயத்துக்கும் திருப்பணி பல செய்து, திருவிழாக்களைச் சிறப்புற நடத்தி முடிவில் முக்தியும் பெற்ருன்.

**பிப்பலாயனரது குன்மம் நீங்கியது.**

பாண்டி நாட்டிலுள்ள ஆதிரத்னேசுர தலத்திலிருந்த பிப்ப லாயனரெனும் அந்தணனுக்குக் குன்ம நோய் வந்து, எவ்வித

மணிமந்த்ர ஔடதங்களாலும் தீரவில்லை. பிறகு சிவதல யாத்திரை செய்து தீர்த்தாடனமும் செய்தால் தீருமென்று பெரியோர்கள் கூற பல நாட்டிலுமுள்ள தீர்த்தாலயங்களில் ஆடியும், தெரிசித்தும் கடைசியாக வில்வாரண்யம் வந்து சேர்ந்தான். அங்குள்ள தீர்த்தமாடி வில்வாரண்யரைப் பக்தியுடன் தெரிசித்துப் பாடிப் பரவி நின்றான். அப்போது சிவனருளால் அசரீரியாக "ஏ பக்தனே! நீ பாதாளேச்சுரம் சென்று தீர்த்தமாடிச் சிவதெரிசனம் செய்தால் உன் ரோகம் நீங்கிவிடும்" என்றது. உடனே வில்வாரண்யரைப் பரவி விடைபெற்றுக்கொண்டு இத்தலத்தையடைந்து எல்லாத் தீர்த்தங்களிலும் ஆடி, சிவதெரிசனம் செய்தவுடன் சிவார்ப் பணமான நைவேத்யத்தைப் புசித்தான். உடனே குன்ம நோய் நீங்கிவிட்டது. அப்பக்தன் பலகாலம் தங்கித் தீர்த்த மாடிச் சிவதெரிசனம் செய்து தன்னூரை அடைந்தான்.

### இத்தலத்தின் சிறப்பு.

மற்றைய தலங்கள் போலல்லாமல் இத்தலத்திலுள்ள தீர்த்தங்கள் எல்லாக் காலங்களிலும் நீராடுவோர்க்குச்சிறந்த பலனையளிப்பன. நாகநாத தெரிசனமும் எப்போதும் சிறந்த பலனையளிக்கும்.


மேலும் வருடப்பிறப்பு, மாதப்பிறப்பு, பிரதோஷம், சோமவாரம், சுக்கிரவாரம் முதலியனவும் மிகச்சிறந்ததாம். சித்திரா பௌர்ணமி, வைகாசி விசாகம், ஆனித் திருமஞ் சனம், ஆடி மாதப்பிறப்பு, அமாவாசை, ஆவணி மூலம், புரட்டாசி நவராத்ரி விசேஷமாம்.

எல்லாச் சிவதலங்களிலும் ஐப்பசி மாதம் பௌர்ணமி யில் நிறைபணியாம். இத்தலத்தில் ஐப்பசி மாதப்பிறப்பிலே

நிறைபணி. இக்காலத்தில் பாதளத்திலிருந்து தனஞ்செயன் வந்து பூசிக்கும் நாளாம்.

கார்த்திகைச் சோமவாரங்களும், தீபதெரிசனமும், தனுர் மாதத்தில் திருவாதிரையில் நடராஜா அபிஷேக தெரிசனமும் விசேஷமாம். முன் சொன்னபடி தைப்பூசத்தன்று சுவாமி பாம்பணி நதியில் தீர்த்தங் கொடுத்தல் மிகவும் நன்னாளாம். மாசி சிவராத்திரியில் எல்லாத் தேவரும் வந்து தெரிசிப்பர். பங்குனி உத்திரமும் தெரிசிப்பார்க்கு எல்லா நலங்களும் தருமென்றறிய வேண்டும்.

மேலும் இத்தலத்தில் மஹாகணபதியும், சுப்ரமண்யமும், அம்பிகை அமிருதநாயகியும், தியாகராஜாவும் மஹா வரப்ரசாத மூர்த்திகளாய் விளங்குகின்றனர்.



பாம்பணி என வழங்கும்-பாதாளீச்சுரம் திருக்கோயில் கெற்பக் கிரஹக் தோற்றம்.

NEMARA PUBLIC LIB

-6 FEB 1955
MADRAS

## திருப்பாதாளீச்சரம்.

பண்—வியாழக்குறிஞ்சி.

### திருஞானசம்பந்தர்—தேவாரம்.

திருச்சிற்றம்பலம்.

மின்னியல் செஞ்சடைமேல் விளங்கும் மதி மத்தமொடு நல்ல
பொன்னியல் கொன்றையினன் புனல்சூடிப் பொற்பமரும்
அன்னம் அனநடையாள் ஒருபாகத் தமர்ந்தருளி நாளும்
பன்னிய பாடலினன் உறைகோயில் பாதாளே.

நீடலர் கொன்றையொடு நிரம்பா மதிசூடி வெள்ளைத்
தோடமர் காதில் நல்ல குழையான் சுடுநீற்றன்
ஆடரவம் பெருக அனலேந்திக் கைவீசி வேதம்
பாடலி னலினியான் உறைகோயில் பாதாளே.

நாகமும் வான்மதியுந் நலம்மல்கு செஞ்சடையான் சாமம்
போக நல் வில்வரையாற் புரமூன் றெரித்துகந்தான்
தோகைநன் மாமயில்போல் வளர்சாயல் தூமொழியைக் கூடப்
பாகமும் வைத்துகந்தான் உறைகோயில் பாதாளே

அங்கமும் நான்மறையும் அருள்செய் தழகார்ந்த அஞ்சொல்
மங்கையோர் கூறுடையான் மறையோன் உறைகோயில்
செங்கயல் நின்றுகளுஞ் செறுவில் திகழ்கின்ற சோதிப்
பங்கயம் நின்றலரும் வயல் சூழ்ந்த பாதாளே.

பேய்பல வுந்நிலவப் பெருங்காடரங் காகவுன்னி நின்று
தீயொடு மான்மறியும் மழுவுந் திகழ்வித்துத்
தேய்பிறையும் அரவும் பொலிகொன்றைச் சடைமேற் சேரப்
பாய்புன லும்உடையான் உறைகோயில் பாதாளே.

கண்ணமர் நெற்றியினன் கமழ் கொன்றைச் சடை தன்மேல்
விண்ணியல் மாமதியும் உடன்வைத் தவன் விரும்பும் [நின்றும்
பெண்ணமர் மேனியினன் பெருங்கா டரங்காக ஆடும்
பெண்ணியல் பாடலினன் உறைகோயில் பாதாளே.

விண்டலர் மத்தமொடு மிளிரும்இள நாகம்வன் னிதிகழ்
வண்டலர் கொன்றைநகு மதிபுல்கு வார்சடையான்
விண்டவர் தம்புரம்மூன் றெரிசெய்துரை வேதநான் கும்அவை
பண்டிசை பாடலினான் உறைகோயில் பாதாளே.

மல்கிய நுண்ணிடையாள் உமைநங்கை மறுகஅன் றுகையால்
தொல்லை மலையெடுத்த அரக்கன்தலை தோள்நெரித்தான்
கொல்லை விடையுகந்தான் குளிர்திங்கள் சடைக்கணிந்தோன்
பல்லிசை பாடலினான் உறைகோயில் பாதாளே.

தாமரை மேலயனும் அரியுந்தம தால்வினையால் தேடிக்
காமனை வீடுவித்தான் கழல்காண்பில ராயகன்றூர்
பூமரு வுங்குழலாள் உமைநங்கை பொருந்தியிட்ட நல்ல
பாமரு வுங்குணத்தான் உறைகோயில் பாதாளே.

காலையில் உண்பவருஞ் சமண்கையருங் கட்டுரை விட்டன்
றால விடம் நுகர்ந்தான் அவன்றன் அடியேபரவி
மாலையில் வண்டினங்கள் மதுவுண் டிசைமுரல வாய்த்த
பாலையாழ்ப் பாட்டுகந்தான் உறைகோயில் பாதாளே.

பன்மலர் வைகுபொழில் புடைசூழ்ந்த பாதாளைச் சேரப்
பொன்னியன் மாடமல்கு புகலிந்நகர் மன்னன்
தன்னொளி மிக்குயர்ந்த தமிழ்ஞான சம்பந்தன் சொன்ன
இன்னிசை பத்தும் வல்லார் எழில்வானத் திருப்பாரே.

திருச்சிற்றம்பலம்.

## திருநாவுக்கரசர் திருக்ஷேத்திரக்கோவை.

திருச்சிற்றம்பலம்.

வீழிமிழலைவெண் காடு வேங்கூர்
வேதிகுடிவிசய மங்கைவியலூ
ராழியகத்தியான் பள்ளியண்ணா
மலையாலங்காடு மரதைப் பெரும்
பாழி பழனம் பனந் தாள்பாதாளம்
பராய்த்துறை பைஞ்ஞீலி பனங்காட்டூர் தண்
காழி கடவூர்க்கக் காரோணத்துங்
கயிலாய நாதனையே காணலாமே.

## சுந்தரமூர்த்தி நாயனர் திருநாட்டுத்தொகை.

பண்—இந்தளம்.

தழலு மேனியன் தையலோர் பாகமமர்ந்தவன்
தொழலுந் தொல்வினை தீர்க்கின்ற சோதி சோற்றுத்துறை
கழலுங் கோவையுடையவன் காதலிக்கும்மிடம்
பழனம் பாம்பணி பாம்புரந்தஞ்சை தஞ்சாக்கையே.

## உமாபதி சிவாசாரியார் அருளிச்செய்த திருப்பதிகக்கோவை.

பறியலூர் விரட்டங் கானாட்டு முள்ளூர்
  பாதாளீச்சுர மெதிர் கொள்பாடி வலிதாயஞ்
சிறுகுடிகச் சூராலக் கோயில் கொள்ளம்
  பூதூர் திருப்புறவார் பனங்காட்டூர் விளநகர் தண்டலை நீ
ணெறியரதைப் பெரும்பாழி பூறல் கரு வூரா
  னிலைபிடும்பா வனங்கடிவாய்க் கரைப்புத்தூர் கடம்பந்
துறை திருவே டகந்திருவஞ் சைக்களமாடானை
  சோபுரங்கற் குடிவடகு ரங்காடுதுறையே.

மேலாகும் விளமர்கர விரம்பெரு வேளூர்
  மிளிர்தலையா லங்காடு குடவாயில் சேறை
நாலூர்ம யானங்கடி வாய்க்கரைப் புத்தூர்
  நவிலுமிரும் பூளைதிரு வரதைப் பெரும் பாழி
மாலூரு மவளி வணல் லூர்பரிதி நியமம்
  வாழ்வெண்ணி பூவனூர் பாதாளீச்சுர நீர்ச்
சேலூருந் திருக்களர்சிற் றேமமுசாத் தானந்
  திருவிடும்பா வனத்தோடு சேர்ந்த கடிக்குளமே.

## உமாபதிசிவாசாரியாருளிய சிவக்ஷேத்திரக்கோவை.

(கலிவெண்பா)

—மாவளமை

தோற்றுபா தாளீச் சுரவமுத நாயகியாள்
போற்றியிடுஞ் சர்ப்ப புரேசனே.

## சேக்கிழார் பெருமான் அருளிச் செய்த பெரிய புராணம்.

(திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர் புராணம் 896ம் திருப்பாடல்)

பொன்னிவளந் தருநாடு புக்குமிக்க பொருவில்சீர்த்
திருத்தொண்டர் குழாத்திஞேடும்
பன்னகப்பூ ணணிந்தவர்தங் கோயிஞேறும்
பத்தருடன் பதியுள்ளோர் போற்றச் சென்று
கன்னி மதிற் றிருக்களரும் போற்றிக் கண்டங்
கறையணிந்தார் **பாதாளீச் சுரமும்பாடி.**
முன்னணைந்த பதிபிறவும் பணிந்து போற்றி
முள்ளிவாய்க் கரையணைந்தார் மூந்நூன் மார்பர்.

## சுந்தரமூர்த்தி நாயனர் வழிபட்டது.

பெரிய புராணத்துட், சேரமான் பெருமாணயனர் புராணத்தில்
119—120 திருப்பாடல்கள்

திருப்புனவா யிற்பதிபி லமர்ந்தசிவ ஞர்மகிழும்
விருப்புடைய கோயில்பல பணிந்தருளான் மேவினர்
பொருப்பிஞேடு கானகன்று புனற்பொன்னி நாடணைந்து
பருப்பதவார் சிலையார்தம் **பாம்பணிமா நகர்** தன்னில்

**பாதாளீச்சர** மிறைஞ்சி யதன்மருங்கு பலபதியும்
வேதாதி நாதர்கழல் வணங்கிமிகு விரைவினுடன்
சூதாருந் துணைமுலையார் மணிவாய்க்குத் தோற்றிரவு
சேதாம்பல் வாய்திறக்குந் திருவாரூர் சென்றணைந்தார்.

திருச்சிற்றம்பலம்.

## இத்தலத்தில் நடைபெறும் திருவிழாக்கள்.

1 சித்திரை வருஷப்பிறப்பு.

2 சித்திரா பௌர்ணமி.

3 வைகாசி விசாகம்.

**குறிப்பு:—** (வைகாசி விசாகோற்சவம் பிரமோற்சவமாக நடைபெற்றுவந்தது தற்போது நின்றிருக்கிறது)

4 ஆடிப்பூரம்.

5 ஆவணிமூலம்.

6 ஷை விநாயகசதுர்த்தி.

7 புரட்டாசி நவராத்ரி.

8 ஐப்பசிமீ (முதல் தேதியே) நிறைபணி

9 ஷை பௌர்ணமி—அன்னாபிஷேகம்.

10 ஷை ஸ்கந்த சஷ்டி உற்சவம்.

11 கார்த்திகை, சோமவாரம்—திருக்கார்த்திகை தீபோற்சவம்.

12 மார்கழிமீ—திருவாதிரை—நடராஜாபிஷேகம். (வருடத்தில் ஆறு அபிஷேகங்களும் சிறப்பாக நடைபெறுகின்றன.)

13 தைமீ பூசம், சுவாமி ரிஷபாரூடராய் அம்பிகையுடன் (சர்ப்பநதியில்) பாம்பணியாற்றில் தீர்த்தம்.

14 மாசிமீ பௌர்ணமி மகத்தில் தீர்த்தம். சிவராத்திரியிரவு விசேஷ பூஜையும் தீர்த்தமும்.

15 பங்குனி—உத்ரம். தீர்த்தம்.

## தலப் பஞ்சாயத்தார்கள்.

1 மன்னார்குடி திருவாளர்

**V. P. N. வேதமுனி செட்டியார் அவர்கள்,**

மானேஜிங் டிரஸ்டி.

2 ஒக்கூர், திருப்பணி தர்மகர்த்தாவின் புதல்வர்

திருவாளர் **சி. கரு. சி. லெ. சிந்தாமணி செட்டியார் அவர்கள்,**

3 கர்னூர் திருவாளர்

**S. பரமசிவம் பிள்ளை அவர்கள்,**

டிரஸ்டிகள்.

மானேஜர்

**C. R. குஞ்சிதபாதம்.**

**28—6—54.**

# 1361ம் பசலி, நெல், ரொக்க வரவு செலவு விபரம்.

## (தணிக்கை செய்யப்பட்டது.)

### வரவு.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| நில வருமானம்:- விற்று வரவு | 24138 | 8 | 0 | | | |
| நெல்லாக வரவு கலம் $165\frac{3}{4}$-க்கு | 994 | 8 | 6 | 25133 | 0 | 6 |
| புஞ்சை & தோப்பு | | | | 176 | 0 | 0 |
| கட்டிட வாடகை | | | | 242 | 0 | 6 |
| மனைப்பகுதி | | | | 8 | 0 | 0 |
| பாசிக்குத்தகை | | | | 16 | 0 | 0 |
| உபய வரவு | | | | 118 | 12 | 0 |
| மோகினி | | | | 161 | 7 | 6 |
| இன்வெஸ்மெண்ட் வட்டி | | | | 497 | 9 | 4 |
| குத்தகை வட்டி | | | | 282 | 8 | 9 |
| கடன் வசூல் | | | | 2 | 0 | 0 |
| சில்லரை ஆதாயம் | | | | 51 | 5 | 0 |
| இன்வெஸ்மெண்ட் திரும்ப வரவு | | | | 1000 | 0 | 0 |
| குத்தகை டிபாசிட் | | | | 785 | 0 | 0 |
| அட்வான்ஸ் வரவு | | | | 21828 | 6 | 0 |
| அட்வான்ஸ் பத்துக்கு வரவு | | | | 1390 | 10 | 0 |
| போனஸ் | | | | 2162 | 9 | 0 |
| ஆக | | | | 53855 | 4 | 7 |

51173

O23'38:1135 P

| | |
|---|---|
| ஆரம்ப இருப்பு ரொக்கம் | 34 0 0 |
| பேங்கு | 10912 7 10 |
| நெல் கலம் 245 1 0 க்கு ரூ 6 வீதம் | 1470 8 0 |
| | 12416 15 10 |
| ஆக கூடுதல் | 66272 4 5 |

செலவு.

| | |
|---|---|
| சம்பளச் செலவு | 3665 8 0 |
| பிரயாண செலவு | 84 10 9 |
| சாதல்வார் | 97 11 3 |
| நித்தியப்படி நெல் K. 219½; | 1293 0 0 |
| ,, சாமான் | 1680 15 1 |
| ,, சோடசசாமான் | 1683 12 6 |
| வருஷ ஏறுபடி | 887 11 4 |
| ,, நெல் K. 10½ | 63 0 0 |
| மாத ஏறுபடி | 207 3 10 |
| ,, நெல் K. ½ | 3 0 0 |
| நஞ்சை மராமத்து | 25 0 0 |
| தோட்டச் செலவு | 125 5 0 |
| G. M. F. | 27 0 0 |
| கட்டிட ரிப்பேர் | 1240 8 9 |
| இஸ்தி | 1810 2 3 |
| தளவாடம் கொள்முதல் | 272 2 9 |

| | | | |
|---|---|---|---|
| கால்நடை கொள்முதல் | 80 | 0 | 0 |
| தளவாடம் ரிப்பேர் | 159 | 9 | 9 |
| கால்நடை போஷணை | 299 | 9 | 3 |
| லைப்ரரி (நியூஸ் பேப்பர்) | 14 | 7 | 0 |
| காலக்ஷேபம் | 85 | 0 | 0 |
| போர்டு காண்டிரிபிவூஷன் | 595 | 0 | 0 |
| ஆடிட்பீஸ் | 297 | 8 | 0 |
| கோர்ட்டு செலவு | 118 | 9 | 0 |
| சில்லரை செலவு | 50 | 14 | 1 |
| ஏல விளம்பர செலவு | 118 | 12 | 0 |
| டிபாசிட் திரும்பக்கொடுத்தது | 500 | 0 | 0 |
| அட்வான்ஸ் திரும்பக் கொடுத்தது. | 21679 | 15 | 3 |
| அட்வான் பத்து | 1392 | 10 | 0 |
| ரிசர்வ் பண்டு | 2000 | 0 | 0 |
| காய்ச்சப்பாடு K. 8–1–0. | 48 | 8 | 0 |
| ஆக | 40607 | 1 | 10 |
| கடைசி இருப்பு ரொக்கம் | 846 | 4 | 0 |
| பேங்கு | 23761 | 6 | 7 |
| நெல் கலம் 176 3 0 ரூ 6 விகம் | 1057 | 8 | 0 |
| | 25665 | 2 | 7 |
| ஆக கூடுதல் | 66272 | 4 | 5 |

CONNEMARA PUBLIC LIBRARY
6 FEB 1955
MADRAS

ராஜேஸ்வரி பிரஸ், காந்தி ரோடு, மன்னார்குடி.